## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

## அசல் வழக்கு எண். 43 /2023

பெயர் : வேம்பு P.W.1

க/பெ. : ராஜசேகர்

தேதி : 17.10.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து கழனிவாசல் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் புல எண்.224/A1 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 33 குழி (445 சதுரமீட்டர்) ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு உள்ளது என்று 2021க்கு பிறகு அளவீடு செய்தேனா என்றால் செய்தேன். எந்த தேதியில் அளவீடு செய்தேன் என்று நினைவில் இல்லை. தாவா சொத்தை கடந்த 14.12.2021 அன்று வெங்கடாஜலம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெற்ற சமயத்தில் தாவா சொத்தின் அனுபவமானது பிரதிவாதி வசம் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தை பிரதிவாதியிடமிருந்து நான் பெற்றுக்கொள்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கிரயம் பெற்ற நாள் முதல் எனது அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்து பிரதிவாதியின் வசம் உள்ளதால் நான் வசப்பரிகாரம் கோரிதான் இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவமானது பிரதிவாதியின் அனுபவத்திலும் வசத்திலும் உள்ளதாலும் எனது அனுபவத்தில் இல்லை என்பதாலும் நான் கோரும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி வைக்கோல் போர் போட்டுள்ளார் என்றாலும் அதில் கூறைவீடு கட்டி தளவாட சாமான்களை போட்டு வைத்துள்ளார் என்றாலும் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.